**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 49/2021**
**Prosecution Witness**:1

| Name | சுந்தரவடிவேல் (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)***

**முதல் விசாரணை தொடர்ச்சி(அரசு தரப்பு):-**

தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள Honda Dio இருசக்கர வாகனம் தான் எதிரிகள் இருவரும் சம்பவத்தின் போது பயன்படுத்திய வாகனம் ஆகும். அந்த **Honda Dio இருசக்கர வாகனம் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

கடையை நான் எத்தனை வருடங்களாக நடத்தி வருகிறேன் என்றால் 20 வருடங்களாக நடத்தி வருகிறேன். எனது கடையில் எத்தனை வருடங்களாக CCTV கேமரா வைத்துள்ளேன் என்றால் எனது கடையில் CCTV கேமரா எதுவும் இல்லை. எனது கடைக்கு அருகில் உள்ள கடைகளில் CCTV கேமரா உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கடை பதிவு செய்யப்பட்ட கடை என்றால் சரிதான். வணிக வரி துறையால் பதிவு செய்யப்பட்ட கடைகளில் CCTV கேமரா பொருத்தப்படவேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகாரை நான் எந்நேரம் கொடுத்தேன் என்றால் மாலை சுமார் 04.30 மணியளவில் புகார் கொடுத்தேன். ஆனால் தகவலை முன்பே காவல்நிலையத்திற்கு தெரிவித்துவிட்டேன். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் தருவதற்கு முன்பே சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் காவல்நிலையத்தில் வைத்து சுமார் 04.30 முதல் 05.00 மணிக்குள் விசாரித்தார்கள். புகாரை நான் எனது சுயநினைவுடன் தான் எழுதினேன்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:10:25 +0530

என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரிலும், அதன் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையிலும், 1ம் எதிரி தினகரன் கடையில் திருடிய ரூ.20,000/- என் வசம் கொடுத்தார் என்றால் சரிதான். எனது புகாரில் 2வது எதிரி பிரபாகரன் என்னிடம் திருடிய பணத்தை கொடுத்தாக கூறவில்லை என்றால் சரிதான்.

2. போலீசார் விசாரணையின்போது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2வது எதிரி எவ்வித பணத்தையும் திருடாத காரணத்தால் தான் நான் எனது புகாரில் அவர் பணத்தை திருப்பி கொடுக்காததை பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2வது எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், சம்பவ இடத்தில் வைத்து 2வது எதிரியை குறுக்காட்டி அவரிடம் வண்டியை பிடித்தோம் என்பதும், போலீசார் கூறியதன் அடிப்படையில் பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மலையம்பாளையம் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2வது எதிரியை சேர்த்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:10:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 49/2021**
**Prosecution Witness**:2

| Name | நாகமணி (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused absent petition U.s. 317 Cr.P.C is filed and allowed)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது நடுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு அ.சா.1சுந்தரவடிவேலுக்கு சொந்தமான ஸ்ரீ விநாயகா அக்ரோ ஏஜென்ஸ்-ல் வேலை செய்து வருகிறேன். 29.06.2021ம் தேதியன்று மதியம் சுமார் 02.30 மணியளவில் நான் மேற்சொன்ன கடையில் வேலை பார்த்துகொண்டிருந்தேன். அப்போது எங்களது கடைக்கு இரண்டு நபர்கள் வந்தார்கள். எங்களது கடையில் இருந்த மேஜை ட்ராவில் இருந்து பணத்தை எடுத்தார்கள். அப்போது அ.சா.1 சுந்தரவடிவேல் கடைக்கு எதிர் புறத்தில் தான் இருந்தார். உடனே நான் இரண்டு நபர்கள் கடையில் இருந்து பணம் எடுத்து செல்கிறார்கள் என்று சத்தம் போட்டேன். நான் அந்த நபர்கள் பணம் எடுத்துகொண்டிருந்ததை பார்த்தேன். உடனே அங்கிருந்த அ.சா.1 சுந்தரவடிவேலும், அருகில் இருந்த பைனான்ஸ் கடையில் இருந்த ராமலிங்கம், கணபதி, தர்மராஜ், ஆனந்த் ஆகியோர்கள் அங்கு வந்து உடனே அந்த இரண்டு நபர்களையும் பிடித்துவிட்டார்கள். நான் போலீசாரிடம் அந்த இரு நபர்களின் பெயர்கள் தினகரன் மற்றும் பிரபாகரன் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். (1வது எதிரி இறந்துவிட்டார், 2வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.) அந்த இரு நபர்களில் ஒரு நபரிடம் இருந்து ரூ.11,400/-ம் மற்றொரு நபரிடம் ரூ.8,800/-ம் இருந்தது. அந்த நபர்களையும் பணம் ஆகியற்றுடன் காவல்நிலையத்திற்கு கூட்டி சென்றார்கள். மேற்சொன்ன நபர்கள் இருவரும் ஒரு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:10:36 +0530

Scootyயில் தான் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார்கள். சம்பவம் பற்றி அ.சா.1 சுந்தரவடிவேல் காவல்நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் முதல் விசாரணையில் இருவர் பணத்தை திருடியதாக கூறும் சமயத்தில் நான் எங்கு நின்று கொண்டிந்தேன் என்றால் கடைக்கு உள்பக்கம் மருந்துகளை அடுக்கி கொண்டிருந்தேன். மேற்படி சம்பவங்கள் CCTV கேமராவில் பதிவாகியிருந்ததா என்றால் எங்களது கடையில் CCTV கேமராக்கள் இல்லை. நான் சத்தம் போட்ட உடன் எவ்வளவு நேரத்தில் உரிமையாளர் வந்தார் என்றால் உடனே வந்துவிட்டார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள எதிரிகளிடம் ஒரு நபரிடம் இருந்து ரூ.11,400/-ம் மற்றொரு நபரிடம் ரூ.8,800/-ம் இருந்தது என்று எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் எஸ்.ஐ சார் கூறியதால் தெரியும். என்னை போலீசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே ஒரு மணி நேரத்திற்குள் கடைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். எங்களது உரிமையாளர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க செல்லும்போது நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. 2வது எதிரி பிரபாகரனுக்கும் இந்த சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றாலும், முதல் விசாரணையில் போலீசார் சொல்லிகொடுத்ததன் அடிப்படையில் 2வது எதிரியை பார்த்தால் அடையாளம் காட்டுவேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.06 06:10:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.